# தேவனுடைய அழைப்புகள்

*மனிதனுடைய தேவனின் செயல்பாடுகளினுடைய வரலாறு என்பது மனிதனை தேவன் அழைத்த வரலாறாகவே இருக்கின்றது. தேவன் மனித குலத்தில் அன்புகூருகின்றார். இந்த அன்பானது அவர் தம் மக்களைத் தேடவும், அவர்களைத் தம்மிடம் அழைக்கவும் காரணமாயிற்று.*

## கடந்த காலத்தில் அவருடைய அழைப்புகள்

*முற்கால உலகத்திலிருந்து, வெள்ளப்பெருக்கின் தண்ணீரினால் சுத்திக்கரிக்கப்பட்ட பூமியின் மேல் வாழ வைக்கப்படுவதற்காக நோவா அழைக்கப்பட்டார் (ஆதி. 6). தேவன் அவருக்குத் திட்டவட்டமான கட்டளைகளைக் கொடுத்தார், மற்றும் நோவா, ''தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம்'' செய்து முடித்தார் (வ. 22). மனிதர் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால், தேவன் அழைக்கின்ற பொழுது மனிதர் பதில்செயல் செய்ய வேண்டும்.*

*ஆபிராம் தம் தகப்பனுடைய நாட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்படி அழைக்கப்பட்டார் (ஆதி. 12:1-4). அவர் விக்கிரகாராதனை இருந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார். தேவன் அவரை முற்றிலுமான பிரிவுக்கு அழைத்து, "நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ" என்று வாக்குத்தத்தம் செய்தார். ஆபிராம் தேவனுடைய அழைப்புக்குப் பதில் கொடுத்ததால் அற்புதம் நிறைந்த மற்ற ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டன. பூமியில் உள்ள குடும்பங்கள் யாவும் அவர் மூலமாகவே ஆசீர்வதிக்கப்பட வேண்டியதாயிருந்தது என்பது தெளிவு. ஆபிரகாமின் கீழ்ப்படிதலில் நாம் அதி வல்லமையான ஒரு இனம் தொடக்கம் பெற்றதைக் காண்கின்றோம்.*

*தேவன் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்தார். அவர்களைக் கொண்டு வரும்படி மோசே அனுப்பப்பட்டார் (யாத். 3:10). அற்புதம் நிறைந்த ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டன, ஆனால் மக்கள் தேவனுடைய அழைப்பைக் கேட்டு, மோசேயின் தலைமைத்துவத்தைப் பின்பற்றி பதில்செயல் செய்தால் மட்டுமே அவைகளை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடியும் என்று இருந்தது. அவர்கள் எகிப்திய விக்கிரகாராதனையிலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ள*

*வேண்டியதாயிருந்தது. சீனாய் மலையடிவாரத்தில் சிலர் விக்கிரகாராதனைக்காரர்களான பொழுது, அவர்கள் கொல்லப்பட்டார்கள் (யாத். 32).*

*பல ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் இஸ்ரவேலர்களை பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து வெளியே அழைத்தார். வெற்றி கொள்ளப்பட்டிருந்த இஸ்ரவேலர்களைத் தேவன் எழுபது ஆண்டுகளுக்குப் பின் கானானுக்குத் திரும்ப அனுமதித்தார் (எரே. 29:10). அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பும்படியும், தங்களின் பரிசுத்த நகரத்தை மறுபடியும் கட்டிக் கொள்ளும்படியும் அழைத்த கோரேசின் கட்டளை பிறப்பிக்கப்பட்டது (2 நாளா. 36:22, 23). செருபாபேல், எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் திரளான எண்ணிக்கையிலான இஸ்ரவேலர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பி, மதில்களை மறுபடியும் கட்டி, தேவாலயத்தை முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.*

## *இன்றைய நாட்களில் அவருடைய அழைப்புகள்*

*இன்றைய நாட்களில் தேவன் நம்மை அழைக்கின்றார். நமக்கு அவர் விடுக்கின்ற அழைப்பானது ஆவிக்குரிய இராஜ்யம் ஒன்றின் அழைப்பாக - இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கும் அழைப்பாக - இருக்கின்றது.*

*நாம் சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டிருக்கின்றோம் (2 தெச. 2:14). இது அற்புதமான, விளங்கிக் கொள்ள முடியாத ஒரு அழைப்பல்ல. மாறாக, இது தேவனுடைய வசனத்தின் மூலமாக ஏற்பட்டதாக உள்ளது. சிலவற்றிலிருந்து நாம் வேறு சிலவற்றிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம்.*

> *நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேது. 2:9).*

> *மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று (1 தெச. 2:11).*

*மற்ற வசனப் பகுதிகளும் இந்த அழைப்பை விவரிக்கின்றன. அப். 2:39ல் இது தேவனுடைய அழைப்பு என்று கூறப்படுகின்றது. நாம் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம் (1 கொரி. 1:2). இது பரலோகத்தின் (பரம) அழைப்பாய் இருக்கின்றது (எபி. 3:1).*

*"வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்ற நேரடி அர்த்தம் தரும் வார்த்தையொன்றை நாம் புதிய ஏற்பாட்டில் பெற்றுள்ளோம். சபை என்பதே அவ்வார்த்தையாகும். ekklesia என்பது இதற்கான கிரேக்க வார்த்தையாகும். இது இரு வார்த்தைகளின் சேர்க்கையாகும்: ek என்றால்*

*"வெளியே" என்று அர்த்தம், மற்றும் kaleo என்றால் "அழைக்கப்பட" என்று அர்த்தம் ஆகும். "சபை" என்ற வார்த்தையானது "வெளியே அழைக்கப் பட்டவர்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாகும். கர்த்தருடைய சபை என்று நாம் குறிப்பிடும் பொழுது, "கர்த்தருடையவர்களாகும்படி வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுத்துகின்றோம். இது, ஒருவர் சபையின் உறுப்பினராவது அவசியமா அல்லவா என்ற கேள்வியைத் தீர்த்து வைக்க வேண்டும். வெளியே அழைக்கப்படுவது அவசியமாய் இருக்கின்றதா? ஆம், அவசியமாகவே இருக்கின்றது! ஒரு நபர் இருளில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கப்பட்டிருந்தால், அவர் வெளியே அழைக்கப்பட்டவர்களில் ஒருவராக அல்லது சபையில் ஒருவராக இருக்கின்றார்.*

*2 பேதுரு 1:5-11ல் நாம், "அவருடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்" வழி முறை ஒன்றைக் காண்கின்றோம். அதில் பேதுரு குறிப்பிட்ட சில கிறிஸ்தவ கிருபைகளைக் குறிக்கின்றார்: ஜாக்கிரதை, விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு. "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுகிறதில்லை" (வ. 10) என்று அவர் கூறினார். ஆம், கிறிஸ்தவர் ஒருவர் கிருபையிலிருந்து விழுவது சாத்தியமேயாகும். நாம் ஒவ்வொருவரும் அவரது அழைப்பை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஜாக்கிரதையாய் இருப்பது தேவையாகும்.*